
007
ஜேம்ஸ் பாண்ட்
துப்பறியும்
காதலியை விற்ற உளவாளி!
ராணி காமிக்ஸ்
ரூ.1-50

# ராணி

## வாங்கி விட்டீர்களா?



குடும்பத்தில் பெரியவர்கள்,
சிறுவர்கள், அனைவரும்
படித்து மகிழத்தக்க
ஒரே வாரப்பத்திரிகை
**"ராணி"** வார இதழ்
**புதன்** கிழமை தோறும்
வெளி வருகிறது.

ராணி காமிக்ஸ்— 5
(மாதம் இருமுறை இதழ்)
செப்டம்பர் 1—15,
1984

# வேவு வீரர் 007 ஜேம்ஸ்பாண்ட் துப்பறியும், காதலியை விற்ற உளவாளி!






ஏஞ்சலா கட்டுடல் கொண்ட சந்தன அழகி. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவள். ராணுவ ரகசியங்களையும், உளவுத்துறை ரகசியங்களையும் தகப்பனார் மூலம் தெரிந்துகொண்டிருந்தவள். அவள் காதலன் ஸ்டீபன். ஆஸ்திரியா நாட்டில் வியன்னா நகரில் ஒரு சொகுசு பங்களாவில் வசித்து வந்தான்.







இல்லே! நானும் இருக்கேன்!
சிவ பூஜையில் கரடி போல் நுழைந்தவனைக் கண்டு, காதலர்கள் திடுக்கிட்டனர்.
நீ…நீ.. யார்?
நான் பாண்ட். ஜேம்ஸ்பாண்ட் 007. மிஸ் ஏஞ்சலா! உம்… மூட்டையை கட்டு. லண்டனுக்கு திரும்பு.
லண்டனுக்கா? உம்… மாட்டேன்!
ஏய்! உன்னை ஆஸ்திரியா ஜெயிலுக்கு அனுப்பி வைக்கிறேன்.
பனிச் சறுக்கு ஈட்டியால், ஸ்டீபன் ஜேம்ஸ்பாண்டை தாக்கினான். துப்பாக்கி விழுந்தது.
ஜேம்ஸ்! இதோடு நீ முடிந்து போ!
என் அந்தரங்கத்தில் இங்கிலாந்து உளவாளி இனி குறுக்கிடக் கூடாது.


என்
காதலில்
குறுக்கிட
நீ யார்?
அந்தக் கொலைத் தாக்குதலில்
இருந்து ஜேம்ஸ்பாண்ட்
தப்பித்துக்கொண்டு—
பனிச் சறுக்குப் பலகையை எடுத்து,
ஜேம்ஸ்பாண்ட் அடிக்க,
ஸ்டீபன் நிலைகுலைந்தான்.
சமாளித்துக்கொண்டு
அவன் துப்பாக்கியை
எடுத்தபோது...


ஜேம்ஸ், காலால் உதைத்த வேகத்தில், கையால் ஓங்கி குத்தினார். அப்போது ஏஞ்சலா துப்பாக்கியை தூக்கினாள்.
ஏஞ்சலா! இது மாதிரி செய்யாதே. பிறகு பெண் என்றும் பார்க்க மாட்டேன்!
முதலில் உன் கால்களைக் கட்டுகிறேன்.
நான் இங்கிலாந்து திரும்ப விரும்பவில்லை. ஸ்டீபனைத் திருமணம் செய்ய நானாகவே இங்கு வந்தேன்.
அதாவது அவன் விவாக ரத்து பெற்றுக் கொண்டால்...
ஸ்டீபன்! ஸ்டீபன்! உதவி! உதவி!


உன் வாயை அடைக்கிறேன்.
ஏஞ்சலா! உனக்கு கெடுதல் செய்யமாட்டேன்! என்னை நம்பு!
கொஞ்சம் ஒத்துழை!
முன் வாசல் வழியா வெளியே போக முடியாது.
007, அவளை சமாதானப் படுத்தினார்.
ஏஞ்சலா! உன் திட்டம் நிறைவேறவில்லையே என்று சஞ்சலப்படாதே.
அப்போது பங்களா உள்...
ஸ்டீபன்! ஸ்டீபன்!


அடக் கடவுளே!
ஏஞ்சலா! இந்தக் கார்தான் இப்போதைக்கு கிடைச்சுது.
இந்தக் கார், எல்லா இடத்திலும் போகக்கூடியது. பெல்ட்டை மாட்டிக்கோ!
007 உங்கள் காதலியை கடத்திப் போய்விட்டான!
ஸ்டீபன் வருத்தப்படாதே. 007 வெகுதூரம் போயிருக்க முடியாது.
அவன் தப்புக்கணக்கு போட்டுவிட்டான். அவனை தப்ப விட மாட்டேன்.
ஏதாவது தந்திரம் செய்து அவளை இங்கிலாந்து கொண்டு போக முயல்வாங்க என்று எனக்குத் தெரியும்.
ஜேம்ஸ்பாண்ட் அவளைத் தூக்கிச் சென்றிருப்பது ஆஸ்திரியா சட்டப்படி குற்றம்.


அலோ! போலீஸ்?
ஒரு பெண்ணைக் கட்டாயப்படுத்தி கடத்திச்செல்ல சட்டம் அனுமதிக்காது.
என்னை இப்படி கடத்திப் போனால் ஸ்டீபனை திருமணம் செய்யாமல் தடுத்திடலாம் என்று நினைப்பா?
ஊகும்! அதை அவன் மனைவியே செய்வாள்.
உண்மையில் அவன் உன்னைத் திருமணம் செய்ய விரும்பவில்லை.
உன்னிடம் இருந்து ரகசியங்களை கறப்பதே அவன் திட்டம்.
பல்கேரிய நாட்டு ரகசிய உளவாளிதான் ஸ்டீபன். இது உனக்குத் தெரியாது.
இல்லை! ஸ்டீபன் ஒரு அகதி. ஆஸ்திரியா வந்தபின் தொழில் செய்து முன்னேறி விட்டார்.
என்ன தொழில்? உளவு பார்ப்பதுதானே!
இருக்கட்டும். நாங்க காதலிக்கிறோம் என்னை பலாத்காரமா கடத்த முடியாது.
பலாத்காரமா கடத்தவே மாட்டேன்.


ஸ்டீபன் பங்களாவில்...
இன்ஸ்பெக்டர்! என் காதலியை இங்கிலாந்து ஏஜெண்ட் கடத்திச் செல்கிறான்.
ஆமாம் இன்ஸ்பெக்டர்! அவன் பெயர் ஜேம்ஸ் பாண்ட்.
என்ன இங்கிலாந்து உளவாளியா?
என்னைத் தாக்கிவிட்டு, என் காதலியை கடத்திப் போய்விட்டான்.
அவன் தப்பி போகாதபடி, ரோட்டின் ரெண்டு பக்கத்தையும் அடைத்து விடுகிறோம்.
பின்னால் போலீஸ் சைரன் சத்தம் கேக்குது.
போலீஸ் மின்னல் வேகத்துல வாராங்க! உம்மால் தப்பிக்க முடியாது.
ஸ்டீபன், போலீசுக்கு போன் பண்ணி பிடிக்கச்சொல்லி இருப்பார்.
அதில் உனக்கும் சந்தோசமா?


முன்னும் பின்னும் போலீஸ் வருது.
உம்! ஜேம்ஸ் இப்போ என்ன செய்யப் போறீங்க?
என்னை அவர்கள் ரோடு வழியா போகவிடலேன்னு வேறு வழியா போவேன்!
ஆங்கில கடத்தல்காரன் ரோட்டைவிட்டு விலகி போய்விட்டான்.
சகதியாக இருப்பதால் கார் போகாது. ஜீப் பின் தொடருது.
உங்களுக்கு பைத்தியமா? போகப் போக ஆற்று ஒரத்தில் சகதி அதிகமா இருக்கும். கார் போகாது.
நிறுத்தி தொலையுங்க! நாம ரெண்டு பேரும் சாகத்தான் வேணுமா?
கடத்தல்காரன் கார் தெரியுது. சீக்கிரம் பிடிப்போம்.
ஆமா சகதி அதிகமா இருக்கு.


விடாதே! எப்படியாவது அவனை மடக்கு!
ஜீப், சகதியில் சிக்கிக்கொண்டது. நடந்து போறோம்.
கவலை வேண்டாம். ஆறு வந்துவிட்டது. அவனால் தப்பமுடியாது.
நீ என்ன சொல்றே! கடத்தல்காரன் அவளுடன் ஆற்றில் நீந்துகிறானா?
இல்லை. அவன் கார் நிலத்திலும் நீரிலும் செல்லும் ஊர்தி.


போலீஸ் எந்திரப்படகுக்கு ஏற்கனவே தகவல் சொல்லியாச்சு. அவங்க ரெடி!
ஏய்! நில்! இல்லாவிட்டா சுடுவோம்!
அந்தப் பெண்ணுக்கு ஆபத்து ஏற்படக் கூடாது.
அவன் கரை ஏறிவிட்டான்.
கரையேறி விட்டானா? பக்கத்து ராணுவ முகாமுக்கு உடனே தகவல் அனுப்புகிறேன்.
என்னவோ போலீஸ் பிடிச்சுடும் என்றாயே! பார்த்தாயா? இனி ஆபத்தே இல்லே.
அற்ப சந்தோசம்! பாவம் நீங்க!


பின்னுல ராணுவ டாங்கி வருது!
நிறுத்து. இல்லாவிட்டால் சுடுவோம்.
என்ன ஜேம்ஸ்பாண்ட்! உங்க ஆறு சக்கர ஊர்தியில் ஒரு டயர் அவுட்!
பாவம் ஜேம்ஸ், நீங்க! ஒவ்வொரு டயரா பஞ்சலாகி, அம்போன்னு அகப்பட போறீங்க!
அம்மாடி! இந்த 007 கழுவுற மீன்ல நழுவுற மீன்.


உனக்கு பலூன் தெரியுமா, பலூன்!
அந்தக் காரில் ஒரு ராட்சத பலூன் இணைக்கப்பட்டு இருந்தது. ஒரு கருவி மூலம், அதனுள் வெப்பக் காற்றை ஜேம்ஸ் செலுத்தினர்.
அட கடவுளே! அதென்ன பறக்கும் பலூன்!
அவன் இப்போ பறந்துகிட்டுதான் இருக்கான்.
நீ என்ன சொல்றே? அவனுக்கு திடீர்னு ரெக்கை முளைச்சு வானத்துல பறந்துட்டானா?
பலூன் மூலம்.


ஜேம்ஸ்! உங்களுக்கு பைத்தியமா? இப்படி அந்தரத்தில் தொங்க!
டாங்கியில் இருந்து தப்பிக்க பறந்தேன். இனி ஹெலிகாப்டர் வரலாம். அதற்குள் இறங்கணும்!
பலூன் காற்றைக் குறைக்–கிறீங்களா?
இறங்க அதுதான் வழி.
கீழே, மலை, காடு, பள்ளம்.
அதோடு வெளிச்சம் வேறு போதாது. எப்படி இறங்குவீங்க?
ஜேம்ஸ்பாண்ட் இறங்கிக் கொண்டிருந்தபோது, கீழே இரண்டு பேர் கவனித்தார்கள்.
அதோ 007–ன் சமிக்ஞை விளக்கு.
இறங்கும் இடத்தைக் காட்ட சிக்னல் கொடு


பலூன் கார் இறங்கியது.
ஏஞ்சலா பயப்படாதே!
இன்னும் எவ்வளவு நேரம் நான் அவதிப்படுவது?
இதோ எனக்கு தகவல் வருது!
பலூன் கார் ரோட்டுக்கு விரைந்தது.
அதோ 007.
சீக்கிரம் பின் கதவைத் திறங்கள். நம்மைத் தேடி ஹெலிகாப்டர் வரலாம்.
இவளை டிக்கியில் போடுகிறேன். உடனே காரை மின்னல் வேகத்தில் ஓட்டுங்கள்.
கொஞ்ச நேரத்தில்...
ஹெலிகாப்டரை கீழே இறக்கு. பலூன் கார் நிற்பது தெரியுது.


மறுநாள் லண்டனில்... உளவுத்துறை தலைவர் மிஸ்டர் "எம்" ஐ உளவுத்துறை செயலாளர் வரவழைத்துப் பேசிக்கொண்டிருந்தார்.
பெண்ணைக் கடத்தியதாக இங்கிலாந்து அரசு மீது ஆஸ்திரியா குற்றம்சாட்டி உள்ளது. புரிகிறதா?
ஆஸ்திரியா பிரஜை ஸ்டீபன் என்பவர் தன் காதலியை, ஜேம்ஸ்பாண்ட் கடத்திப் போய்விட்டதாக புகார் கொடுத்து இருக்கான்.
அதற்கு பதில் சொல்ல வேண்டிய இக்கட்டான கட்டத்தில் இங்கிலாந்து அரசு உள்ளது.
ஜேம்ஸ் பாண்ட்டால் ஏற்பட்ட அவமானம் இது.
செயலாளர் அவர்களே. நிலைமை புரியுது.
ஆனா நம்பிக்கைவாய்ந்த ஒரு ஏஜெண்ட் மீது குற்றம்சாட்றது எனக்கு வருத்தமா இருக்கு.
ஜேம்ஸ்பாண்ட், அந்தப் பெண்ணை கடத்தவில்லை என்கிறீர்களா?
அந்தப் புகாரை விசாரிக்கிறேன்.
மேல் எழுந்தவாரியா பார்க்கிறப்போ அந்தப் பெண்ணுடன் தொடர்பு வைக்க 007 எத்தனிப்பது போலிருக்கு.
உண்மையா? அப்படீன்னா நாம எப்படி பதில் சொல்றது?


புகார் உண்மைன்னா ஆஸ்திரியா சட்டப்படி ஜேம்ஸ்பாண்ட் தண்டனை அடையவேண்டியதே.
வில்லியம் சார்! இந்த நெருக்கடியில் கூட மிஸ்டர் "எம்' எப்படி அமைதியா இருக்கார்?
ஜேம்ஸ்பாண்ட் ஆஸ்திரியாவில் பிடிபட்டு தண்டிக்கப்பட்டா என்னவாகும்?
அதை எப்படி சொல்ல முடியும்?
பிடிபட்டால் ஜேம்ஸ்பாண்டைப் பற்றி பரவாயில்லை. அந்தப் பெண்... அவள் மூலம் ரகசியங்கள் வெளியானால்.. அதுதான் கவலை.
பால்கன் நாடுகளில் நம் நடவடிக்கைகள் முழுவதையும் அவள் தன் தகப்பனார் மூலம் தெரிஞ்சு கொண்டிருக்காள்.
ஏஞ்சலாவின் தகப்பனார் பேட்ரிக், அங்கேரி புரட்சிக்கு பிறகு, அங்கிருந்து தப்பி நமது உளவு துறையில் சேர்ந்தார் இல்லையா?
ரெண்டு மாதத்துக்கு முன் அவர் இறந்ததும், இந்த ஸ்டீபன், ஏஞ்சலாவுக்கு வலைவீச ஆரம்பிச்சான்.
அதுல வெற்றியும் அடைஞ்சுட்டான்!


ஆமா! அதுதான் வேதனே!
இப்போ அவள் மூலம் எல்லா தகவலேயும் பல்கேரியாவுக்கு ஸ்டீபனல் விற்கமுடியும்.
ஸ்டீபனிடம் எல்லா ரகசியத்தையும் ஏஞ்சலா சொல்றதுக்கு முன்னடி, அவளே இங்கிலாந்து கொண்டுவர முடியாதா?
அதுக்கு சட்டபூர்வமான வழி எதுவும் இல்லே.
அவளே 007 ஆஸ்திரியாவில் இருந்து கொண்டுவரவும் வழி இல்லேயா?
எல்லா விமான நிலேயத்திலும் காவல் போட்டிருப்பாங்க!
அப்போ, ஜேம்ஸ் அவளேக் கடத்தியும் பயன் இல்லே!
பெண்கள் நினேத்தால் மனதை மாற்றிக்கொள்ளலாம்.
அப்படியானல் ஜேம்ஸ், அவளே மனம் மாற்றம் அடையச் செய்யணும் இல்லேயா?
கிரேசி! அது கஷ்டமான காரியம். பொறுத்து பார்ப்போம்.
அந்த நேரத்தில், பாதுகாப்பு மிகுந்த ஒரு ஓட்டலில்...
நீங்க போங்க. நான் தனியா இருக்கணும்.


நான் உனக்கு சாப்பாடு கொண்டு வந்தேன்.
பொய். என்னை உங்க வசப்படுத்த நினைக்கிறீங்க.
உங்க உளவுத்துறையில் நீங்க பெரிய காதல் மன்னன். அது எனக்குத் தெரியும்.
நான் ஸ்டீபனை மறந்துட்டு உங்ககிட்ட சிக்குவேன் என்று மனப்பால் குடிக்கிறீங்க.
அது நடக்கவே நடக்காது.
உனக்கு சில உண்மைகளைச் சொல்லணும்.
மிஸ்டர் "எம்", என்னை ஸ்டீபனிடம் இருந்து பிரிக்க திட்ட மிட்டிருப்பது எனக்குத் தெரியும்.
கொஞ்சம் பொறுமையா சொல்றத கேளு.
நீ ஆபத்தில் சிக்கி இருக்கிறாய். அதனால் பால்கன் நாடுகளில் நடவடிக்கைகளுக்கும் ஆபத்து.
ஆபத்தா? என்ன சொல்றீங்க?


உன்னையும், ஸ்டீபனையும் கே. ஜி. பி. என்ற ரஷிய உளவுத்துறை வலைவீசி தேடுகிறது.
இப்படிச் சொல்லி என்னை பயமுறுத்த பார்க்கிறீங்க!
நான் சொல்றத கொஞ்சம் கேளு!
பால்கன் எதிர்ப்பு கோஷ்டிகளுடன் தொடர்பு உள்ளவர்களை ஸ்டீபன் மோப்பம் பிடிக்கிறான். அதனால் ரஷியர்களுக்கு உன் மீது அக்கறை இருக்கு.
இந்த லாட்ஜை சுற்றி ஏன் இந்தக் காவல்? யோசித்துப் பார்.
ரஷியர்கள், அபாயம் அப்படி இப்படி என்று நீங்க அளக்கிறது எல்லாம் கட்டுக்கதை.
சரி, இனி உன் இஷ்டம்.
நான் பெண்களை கட்டாயப்படுத்த மாட்டேன்.
உனக்கு பாதுகாப்பு தேவை. வேண்டாம் என்றால் அது உன் இஷ்டம்.



எனக்கும் விருப்பம் இல்லை. வா! இருவரும் போகலாம்.
நான் இங்கு அடைபட்டு கிடக்கமுடியாது.
உங்க வேலை, இத்துடன் காலாவதி ஆகப்போகுது!
என் வேலை பற்றி கவலை இல்லை. நீ ஸ்டீபன் கையில் சிக்கக்கூடாது என்பதே கவலை.
காவலை மீறி எப்படி போவது?
காவலர்களுக்கு எப்படி டிமிக்கி கொடுப்பது என்று எனக்குத் தெரியும்.
அப்போது லாட்ஜ்க்கு வெளியே—
துப்பாக்கி சத்தம். வெளியே என்ன நடக்குது?
நான் பயந்துபடி ஆபத்து நெருங்குது!
அது ரஷியர்கள்.
அட கடவுளே. ஜேம்ஸ், நாம தப்பிக்க முடியாதா?


சீக்கிரமா ஓடினா தப்பிக்கலாம். ஒரு கோட்டை போட்டுக்கிட்டு ஓடிவா.
ரஷிய கே. ஜி. பி. உளவுத் துறையினர் லாட்ஜ்க்குள் நுழைந்து—
ஏஞ்சலாவுடன் 007 ஓடினார்.
சீக்கிரம். வா!
இந்த அலமாரியில் பதுங்கவா?
இல்லை. இதன் பின்னால் ஒரு ரகசிய வழி இருக்கு.
என்னைப் பின்தொடர்ந்து வா. ஜாக்கிரதை.
இதென்ன சுரங்க வழியா?
ஆமா.


பனிப்புயல், பனிச்சரிவு இவற்றில் இருந்து தப்பிக்கும் வழி, இது.
அப்படியானா இது எங்கு போய் முடியும்?
ஒரு பாறை அடியில் குகையில் போய் முடியும்.
பனிப்புயலால் லாட்ஜ் சேதம் அடைந்தால், ஆட்கள் இந்த வழியா தப்பிக்கலாம்.
அதோ அவர்கள்!
நம்மை கண்டுபிடிச் சுட்டாங்க.
இருவரும் மரங்களுக்குள் மறைந்தார்கள்.
நீ ஓடு. நான் வர்றேன்.
நானும் உங்களுடன் வர்றேன்.


நான் சொன்னபடி செய். அவங்க பின்தொடர்வதை தடுக்கணும்.
கே. ஜி. பி. உளவாளி பின்தொடர்ந்தான். அப்போது திடீர் என்று—
ஜேம்ஸ் ஆபத்தில்லையே!
இப்படி கேள்வி கேட்டு நேரத்தை வீணாக்காதே. ஓடு! ஓடு!
அவங்களைப் பிடி!


என்னால் ஓடமுடியலே.
கொஞ்சம் இளைப்பாரு. பிறகு ஓடலாம். விரைவில் இருட்டிவிடும். பின் தப்பிப்பது எளிது.
நான் கண் காணிக்கிறேன் நீ ஓய்வு எடு.
இது உண்மையா?
எது?
லாட்ஜ் மீது படையெடுப்பு, இப்போ நம்மை விரட்டுவது இதெல்லாம் உங்க உளவுத்துறையின் நாடகம் தானே!
நீ இன்னும் என்னை நம்பவில்லையா?
இப்போது நடப்பது ஏன் ஒரு நாடகமாக இருக்கக்கூடாது?
என்னைப் பயமுறுத்த உங்க உளவுத்துறை இப்படி ஒரு உபாயம் செய்கிறது!
உங்களை நான் நம்ப இப்படி ஒரு ஸ்டண்டா?


நீ இப்படி சந்தேகப்பட்டால், நீ உன் வழியைப் பார். நான் என் வழியே போகிறேன்.
ஜேம்ஸ், எங்கே போறீங்க?
நம்மை விரட்டிகிட்டு வாரவங்க எதிர் உளவாளிகள் இல்லை என்றால் உனக்கு ஏன் கவலை?
நான் என்னையாவது காப்பாற்றப் போகிறேன்.
நீங்கள் சொல்வதைக் கேட்கிறேன். என்னைவிட்டு போகாதீங்க.
என்னுடன் வர விருப்பம்தானே?
விருப்பமே. கே. ஜி. பி. கையில் என்னை விட்டுடாதீங்க.
வா! புதர்களுக்குள் பதுங்குவோம்.


பிறகு...
இருட்டிவிட்டது. நாம் மெள்ள நழுவுவோம்.
இப்போ புறப்பட்டால் ஆபத்து இல்லையே!
இல்லை, வா!
இரவோடு இரவா சிங்கன் பார்க் என்ற இடத்தை அடையணும்.
நில்... ஏதோ சத்தம்.
என்ன விஷயம் ஜேம்ஸ்?
அங்கே பார்!


யார் அது?
அவர் ஆன்பிஜின். கே. ஜி. பி. உளவுத்துறை தலைவர்.
கொரக்ஷோ! அங்கு போய் பார்ப்போம்.
ரஷியர்கள் இன்னும் நம்மைத் தேடுறாங்க இல்லையா?
ஆமாம்!
நாம், இருட்டில், மெள்ள மெள்ள பதுங்கிச் சென்றால் தப்பித்து விடலாம்.
மறுநாள் காலை இருவரும் சிங்கன் பார்க் என்ற இடத்தை அடைந்தனர்.
யாருக்கும் சந்தேகம் வரும்படி நடமாடக்கூடாது. முதலில் ஓட்டலில் சாப்பிடுவோம்.
இப்போ நீதான் முடிவு பண்ணனும்.
எப்படி ஜேம்ஸ்?


ஒண்ணு, உன் காதலன் ஸ்டீபனிடம் போ.
அல்லது ஆஸ்திரியா போலீசாரிடம் போய், உன்னைக் கடத்தியவர் விட்டுவிட்டதாகச் சொல்.
நான் போலீசில் சொன்னால் நீங்க தப்பமுடியாதே!
அதைப்பற்றி நீ கவலைப் படாதே.
ரஷியர்களிடம் இருந்து என்னை நீங்க காப்பாத்தியதால் உங்களைப் போலீசில் காட்டிக் கொடுக்க மாட்டேன்.
நன்றி. அப்படீன்னா உன் காதலனை வரச்சொல்.
வரச்சொல்றேன் அதுவரை நீங்க என்னுடன் இருக்கணும்
வேண்டாம். உன்னை ஸ்டீபன் வீட்டில் விடுகிறேன், வா!
ஏஞ்சலா காதலனுடன் போனில் பேசினாள்.
ஸ்டீபன்! நடந்ததை நேரில் சொல்றேன். சீக்கிரம் உங்களைப் பார்ப்பேன்.
உங்களைப் பற்றி சொல்லவில்லை.
எங்கிருந்து போன் பேசினாய் என்று போலீசார் கண்டுபிடிக்க முடியும்.


அடுத்து என்ன செய்யணும்
இங்கே எச்சரிக்கையா இரு. நான்ஒரு கார் கொண்டு வாரேன்.
கொஞ்ச நேரத்தில் 007, காருடன் திரும்பினர்.
காரை வாடகைக்கு எடுக்கும்போது உங்களை யாரும் கண்டு பிடிக்கலியா?
வேறு பெயரில் இன்னொரு பாஸ்போர்ட் வச்சிருக்கேன். அதைக் காட்டினேன்.
உங்களைப் போல ஏஜெண்டுகளுக்கு மாற்று பாஸ்போர்ட் அவசியமே!
உன்னை ஸ்டீபன் வீட்டில் விட்டுவிட்டால் இப்போதைக்கு பிரச்சினை தீர்ந்தது.
ஸ்டீபன் பங்களாவை 007 நெருங்கிய போது
ஸ்டீபனைப் பார்க்க யாரோ வந்திருக்-காங்க.
ஜேம்ஸ்! ஏன் காரை இங்கே நிறுத்திட்டீங்க?
அந்தக் காரை அடையாளம் தெரியலையா உனக்கு?


யார் கார் அது?
நம்மைத் தேடும் கே. ஜி. பி. உளவு தலைவர் ஆன்யிஜின் கார் அது.
நம்மை பிடிக்க வந்த அதே ரஷியர்களா?
அப்படித்தான் நினைக்கிறேன்.
பால்கன் எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றி உன்னிடம் தகவல் அறிய அவங்க துடிக்கிறாங்க.
உன்னை வைத்து பல்கேரியாவுக்கு தகவல் கொடுப்பது ஸ்டீபன் திட்டம் என்று நான் ஏற்கனவே சொல்லி இருக்கேன்.
ஸ்டீபன் என்னைப் பயன்படுத்த முயல்கிறார் என்பதை நம்ப முடியவில்லை.
அது உன் விருப்பம். ஆனா அவங்க பொறியில் நாம சிக்கக்கூடாது.
அந்த கே. ஜி. பி. உளவாளிகளைப் பார்க்க எனக்கு பயமா இருக்கு.
உன் காதலனை அவர்களிடம் விட்டுவிடுவோமா? உன் நிலை என்ன?
நாம் ஏதாவது செய்யணும் ஜேம்ஸ்!


நீ, இங்கேயே இரு! நான் போய் ஸ்டீபன் வீட்டில் என்ன நடக்-கிறது என்று பார்க்-கிறேன்.
நானும் உங்களுடன் வாரேன்.
நாம் பின்புறமா போவோம்.
இங்கே காவல் இல்லை. வேலைக்காரர்கள் உண்டா?
நான் வந்தபோது ஸ்டீபனும், அவர் ஆள் சிசரும் தான் இருந்தனர்.
பின் வாசல் வழியா நுழைவோம்.
நல்ல வேளை பூட்டு பலமா இல்லை.
உள்ளே உனக்கு வழி தெரியுமா?
தெரியாது. நான் வந்த கொஞ்ச நேரத்தில் நீங்க வந்துட்டீங்களே!


ஸ்டீபன்! நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டிருப்பதால், நேரா "பிசினஸ்" பற்றி பேசலாம்.
உள்ளே கேஜிபியினருடன் ஸ்டீபன்.
சுற்றி வளைக்காமல் பேசுவோம்.
உங்க பேரம் என்ன என்று சொல்லுங்க.
ஏஞ்சலாவை, ஜேம்ஸ்பாண்ட் நீண்டநாள் பிடிச்சு வைக்க முடியாது.
என்னுடன் அவள் போனில் பேசினாள். எனவே அவள் விரை-வில்என் பங்களா திரும்புவாள்.
ஏதாவது ஒரு வழியில் ஏஞ்சலா உங்களி-டம் விரைவில் வருவாள்.



உள்ளே நடக்கும் பேச்சை இருவரும் கேட்டனர்.
ஜேம்ஸ்பாண்டை நாங்கள் வலைவீசி தேடி வருவதால், ஏஞ்சலாவை அவன் அதிக நாள் பிடித்து வைக்கவே முடியாது.
அவள் உன்–னிடம் வந்ததும் எங்களிடம் ஒப்படைத்துவிடு. 10ஆயிரம் டாலர் தருகிறோம்.
ஏஞ்சலா, ஒரு தகவல் சுரங்கம். அவளை இந்த குறைந்த விலைக்கு விற்கமாட்டேன்.
25 ஆயிரம் டாலராவது கொடுத்தால்தான் என் காதலியை உங்களிடம் ஒப்படைப்பேன்.
சரி ஸ்டீபன்! நீ கேட்கிறபடியே 25 ஆயிரம் டாலர் கொடுக்கிறோம்.
இப்போ 10 ஆயிரம் டாலர் ரொக்கமா கொடுத்திடுங்க!


அவளை உங்களிடம் ஒப்படைக்கும்போது மீதி தொகை முழுவதை யும் கொடுத்திடணும்.
சரி.
இன்னும் 24 மணி நேரத்தில் ஏஞ்சலாவை உங்களிடம் ஒப்படைக்க முடியும்.
இதோ 10 ஆயிரம் டாலர். சொன்னபடி நடந்துகொள்.
கே. ஜி. பி.யை ஏமாற்றமுடியுமா?
அவளை எங்கே, எப்படி ஒப்படைப்பது என்பதை நாளை பேசுவோம்.
அடக் கடவுளே! ஸ்டீபன் என்னைக் காதலிப்பதாக நம்பிவிட்டேனே!
கவலைப் படாதே! இப் போதாவது உண்மையை புரிந்து கொண்-டாயே!
காதலிப்பதாக நடித்து என்னை மோசம் செய்து விட்டானே!


என் தாய் நாட்டுக்கு எவ்வளவு பெரிய துரோகம் செய்ய இருந்தேன்.
ஸ்டீபனிடம் ஏற்கனவே நிறைய ரகசியம் கூறி இருப்பாயே!
நான் இதுவரை ஒன்றும் சொல்ல வில்லை. இங்கிருந்து போவோம்.
நில்.
இவன்தான் சீசர். ஸ்டீபன் ஆள்.
ஜேம்ஸ்! துப்பாக்கியை கீழே போடு. இல்லாவிட்டால் சுடுவேன்.


இருவரும் கையை தூக்குங்கள்.
ஏஞ்சலா! என்ன ஆச்சரியம்!
இவங்க பின்வாசல் வழியா வந்திருக்காங்க!
ஏஞ்சலா! நான் எதார்த்தமான மனிதன். எனக்கு பணம்தான் முக்கியம்.


உன்னை கே. ஜி. பி. யிடம் 25 ஆயிரம் டாலருக்கு விற்க முடிவு செய்து விட்டேன். சீசர், அவனைப் பிடித்து கட்டு.
ஜேம்ஸ்பாண்டை தீர்த்துவிடுகிறேன்.
ஜேம்ஸ்! அருகில் உள்ள காட்டில் நீயே உனக்கு கல்லறை தோண்டிக் கொள்.
ஏஞ்சலாவை விற்கும் பணத்தை அனுபவிக்க உனக்கு விருப்பம் இல்லையா?
ஜேம்ஸ்! என்ன சொல்றே!


என் காரில் உள்ள குண்டு இன்னும் கொஞ்ச நேரத்தில் வெடிக்கப் போகுது. உடனே போலீஸ் இங்கே வரும். நீ பிடிபடுவாய்.
உன் காரில் வெடிகுண்டா?
ஆம்! இங்கே வரும்முன் "டைம் பாமை" ஓட விட்டுவிட்டு வந்தேன்.
அதில் உள்ள சமிக்ஞை ஒலி எங்கள் வேவுத் துறைக்கு தகவல் கொடுத்துக் கொண்டிருக்கும்.
நான் ஒரு மணி நேரத்தில் காருக்கு திரும்பாவிடில்...
என்ன நடக்கும் சொல்!
குண்டு வெடித்து, ஒரு பனை உயரத்துக்கு தீ சுவாலை எழும்; பயங்கர சத்தம் கேட்கும்.
என் வேவுத்துறையுடன் தொடர்பு துண்டித்து, அவங்க எச்சரிக்கை அடைவாங்க.


உடனே அவங்க ஆஸ்திரியா போலீசுக்குச் சொல்வாங்க.
போலீஸ் உன்னை பிடிக்கும். உன் வாழ்வு முடியும்.
ஜேம்ஸ்! காரில் வெடிகுண்டு, சமிக்ஞை கருவி எல்லாம் பொய்!
காருக்கு போய் அதெல்லாம் உண்மையா என்று பார்ப்போம்!


சீசர்! இவளை பார்த்துக்கொள். இவனை காருக்கு கூட்டி போகிறேன்.
இனி இவன் திரும்பமாட்டான்.
உன் கார் எங்கே?
மரங்களுக்குள் நிறுத்தி உள்ளேன்.
வெடிகுண்டு எங்கே? காட்டு!
பின்னால் டிக்கிக்குள் இருக்கு.


ஸ்டீபன். திறந்து பார்.
திறக்கும்போது வெடிக்கும்படி செய்திருப்பாய்.
நான் என்ன முட்டாளா? விவரம் இல்லாம உயிர் விட!


அதைத் திறந்து காட்டும் உரிமை உனக்கே. உம்...திற...
திற ஜேம்ஸ்! இல்லாவிட்டால் குண்டு உன்னை துளைக்கும்.
ஜேம்ஸ், சாவியை அழுத்தி டிக்கியை திறந்தார்.
உள்ளே புகை உமிழும் சாதனம்!


"புசு புசு" என்று பாய்ந்து வந்த மயக்கப் புகை தாக்க, ஸ்டீபன் சுருண்டு விழுந்தான்.
சாரி ஸ்டீபன்! எனக்கு வேறு வழி இல்லே. நல்லா தூங்கு.
ஏஞ்சலாவின் அபயக் குரல் கேட்டு ஜேம்ஸ், பங்களாவுக்கு ஓடினார்.
ஜேம்ஸ்...
ஏஞ்சலாவை சீசர் என்ன செய்கிறான்?


இப்போது நீ ஸ்டீபன் காதலி இல்லே. கே. ஜி. பி. வசம் ஒப்படைக்கும்முன் எனக்கு விருந்தாகு.
சீ, நாயே! விடு என்னே.


அப்போது...


யார் அது?


ஸ்டீபன்! வந்தது நீங்களா?
அது 007 ஆக இருக்கமுடியாது. என்றாலும் உறுதிப்படுத்தணும்.
தனக்கு பாதுகாப்பா ஏஞ்சலாவை கேடயமாகப் பிடித்துக்கொண்டான்.
எனக்கு பாதுகாப்பு நீயே!


வந்தது யார் என்று
கண்டறிய சீசர்
சுற்றுமுற்றும்
பார்த்தான்.
மறைந்து இருந்த ஜேம்ஸ், திடீர் என்று எழுந்து,
கதகதப்பு அடுப்பில் ஒரு கட்டையை எடுத்து வீசினார்.


ஓ! ஜேம்ஸ்! கடவுளுக்கு நன்றி.
உங்களுக்கு ஒன்றுமில்லையே!
கீழே கிடந்த துப்பாக்கியை
சீசர் தூக்கியபோது
ஐயோ,
ஜேம்ஸ்!


கனமான ஓக் மரத்தில் செய்யப்பட்டிருந்த அந்த சாப்பாட்டு மேஜை ஜேம்ஸ் பாண்டை காத்தது.
அதுமட்டும் அல்ல. அதுவே ஆயுதமாகவும் தாக்கியது!
நான் பயந்தே போனேன். ஏன் நீங்கள் சுட்டிருக்கக்கூடாது?
இவர்களை நான் கொல்லக் கூடாது. ஒப்பந்தத்தை மீறிய தற்காக கே. ஜி. பி. இவர்களை பார்த்துக்கொள்ளும்!


ஸ்டீபன் கதி என்ன?
சில மணி நேரம் ஆகும், மயக்கம் தெளிய.


இது வாடகைக் கார் இல்லை என்பது இப்போது உறுதியாகி விட்டது.
ஆமாம்! இது எங்கள் வேவுத் துறையைச் சேர்ந்தது. இதில் நாம் வியன்னா போகலாம்!


வியன்னாவில் உள்ள இங்கிலாந்து தூதரகத்தில்...
கடத்தியவரும், கடத்தப்பட்டவரும் நீங்கள் தானா? நீங்கள் முதலில் செயலாளரை பார்ப்பதே நல்லது.


என்னை ஜேம்ஸ் கடத்தவில்லை. ஸ்டீபனிடம் இருந்து தப்பிக்க உதவினர்.
ஜேம்ஸ்பாண்ட்! எல்லா விவரத்தையும் போலீசுக்கு தெரிவிக்கிறோம்.
ஜேம்ஸ்! உங்க மீதிருந்த வழக்கை ஆஸ்திரியா போலீஸ் வாபஸ் பெற்றுக்கொண்டது. நீங்க இங்கிலாந்து திரும்பலாம்.
வியன்னாவில் இருந்து லண்டன் புறப்பட்ட விமானத்தில்...
ஜேம்ஸ்! லண்டன் போனதும் ஒரு வாரம் தனிமையில் இனிமை காணணும்!







ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: எஸ்.ராமஜெயம், 1091,பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி.கல்யாணசுந்தரம், ராணி அச்சகம்,1091,பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. Copyright: Express Newspapers Plc. and Glidrose Publications Limited. LONDON.

# வார்த்தைப் பின்னல்

கீழே சில வார்த்தைகள் அல்லது வார்த்தை தொகுதிகள் கொடுக்கப்பட்டு உள்ளன. அந்த வார்த்தைகளை எழுத வேண்டிய கட்டங்கள் அதன் கீழே கொடுக்கப்பட்டு உள்ளன.

எத்தனை எழுத்துக்கள் உள்ளனவோ, அத்தனை எண்ணிக்கை உள்ள கட்டங்களில், எல்லா வார்த்தைகளையும், ஒன்று ஒன்றாக எழுதுங்கள். கடைசியில் எல்லா வார்த்தைகளும் பொருந்திய "வார்த்தைப் பின்னல்" கிடைக்கும். அது புதிய கட்டங்களின் வடிவமாகவும் அமையலாம்!

**4 எழுத்து வார்த்தை**

ஒரு புலி
சர வெடி

**5 எழுத்து**

சிறு கத்தி
தம்பி நீ வா
இரு டாலர்
நிற்கவும்

**6 எழுத்து**

நல்ல வயல்
இரண்டாவது
கடும் இருள்
ரம்ப வெட்டு
பக்க வாசல்

**7 எழுத்து**

சக்ரவர்த்தி
விற்பனை இல்லை
துன்பக் கனவு

**8 எழுத்து**

விராலிமலை போவோம்

**10 எழுத்து**

பாசம் நிறைந்த மாணவி



(விடை: அடுத்த பக்கம்.)

முன்பக்க வார்த்தை பின்னல் புதிருக்கு விடை.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | க | டு | ம் | இ | ரு | ள் | | | | ந |
| | | | | ரு | | | | த | | ல் |
| | இ | ர | ண் | டா | வ | து | | ம் | | ல |
| | | ம் | | ல | | ன் | | பி | | வ |
| பா | | ப | | ர் | | ப | | நீ | | ய |
| ச | ர | வெ | டி | | ப | க் | க | வா | ச | ல் |
| ம் | | ட் | | | | க | | | க் | |
| நி | | டு | | வி | | ன | | | ர | |
| றை | | | நி | ற் | க | வு | ம் | | வ | |
| ந் | | | | ப | | | | | ர் | |
| த | | ஒ | | ஊ | | சி | று | க | த் | தி |
| மா | | ரு | | இ | | | | | தி | |
| ண | | பு | | ல் | | | | | | |
| வி | ரா | வி | ம | லை | போ | வோ | ம் | | | |

இந்தக் கெடிகாரத்தின் நடுவே 2 நேர் கோடுகளை வரையுங்கள். அப்போது கெடிகாரம் 3 பகுதிகளாகப் பிரிக்கப் படும். அப்படிப் பிரிக்கப்படும் பகுதிகளில் ஒவ்வொன்றிலும் உள்ள எண்களை கூட்டினால் ஒவ்வொரு பகுதியிலும் மொத்தம் 26 வரவேண்டும். அப்படி வரும்படி 2 நேர் கோடுகளைப் போட வேண்டும்!




விடை: 10–க்கும் 11–க்கும் இடையே தொடங்கி 2–க்கும் 3–க்கும் இடையே ஒரு கோடும்; 8–க்கும் 9–க்கும் இடையே ஆரம்பித்து 4–க்கும் 5–க்கும் இடையே 2–வது கோட்டையும் போட வேண்டும்.

புள்ளி வைத்துள்ள பகுதியை கலர் பென்சிலால் வண்ணம் கொடுங்கள். ஒரு உருவம் வெளிப்படும்.



மேலே இருக்கும் வாத்து, கீழே உள்ள குளத்துக்கு போய் சேரவேண்டும். வழியைக் கண்டுபிடியுங்கள்.



இங்கே 5 சிறுவர்கள் பட்டம் விடுகிறார்கள். யார் பட்டம், எங்கே பறக்கிறது என்று கண்டுபிடியுங்கள்!



விடை: 1–வது சிறுவன் 1–வது பட்டத்தையும்: 2–வது சிறுவன் 5–வது பட்டத்தையும்: 3–வது சிறுவன் 2–வது பட்டத்தையும்: 4–வது சிறுவன் 3–வது பட்டத்தையும்: 5–வது சிறுவன் 4–வது பட்டத்தையும் பறக்க விடுகின்றன.

இங்கே எட்டு பொம்மைகள் உள்ளன. இவற்றில் ஒரு பொம்மையைத் தவிர மற்ற ஏழு பொம்மைகளும் ஒரே மாதிரியாக உள்ளன. வித்தியாசமான பொம்மை எது?



உள்ளே இருக்கும் பாப்பா வெளியே வரவேண்டும். அதற்கு மூன்று வழிகள் உள்ளன. எந்த வழியாகச் சென்றால் வெளியே போகமுடியும்?



இந்தப் படத்தில் உள்ள முக்கோணங்கள் அனைத்தையும் கலர் பென்சிலால் வண்ணம் தீட்டிப் பாருங்கள்!





மேலே இருக்கும் பூனை, கீழே எலிகள் இருக்கும் இடத்தைப் போய் அடைய வேண்டும்.
வழியைக் கண்டுபிடியுங்கள்.



# உங்கள் கருத்து

சித்திரக் கதையை படித்துவிட்டு, உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.

முகவரி: ''ராணி காமிக்ஸ்'', 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை - 600 007.

## மந்திரியைக் கடத்திய...!

ஜேம்ஸ்பாண்டின் ''மந்திரியைக் கடத்திய மாணவி'' கதையை பேய்க் கதையை படிக்கும் நடுக்கத்துடன் படித்து முடித்தேன்.

எஸ். கருப்பசாமி, பம்பாய்-17.

மேலும், மேலும் படிக்கத் தூண்டும் வகையில் சிறப்பாக அமைந்திருந்தது, ''மந்திரியை...'' சித்திரக்கதை.

எஸ். வில்லியம் ஜார்ஜ், தோகூர், தஞ்சை மாவட்டம்.

கதை விறுவிறுப்பாக மட்டும் அல்ல; அடுத்து என்ன நடக்கும் என்று துடிதுடிப்பாகவும் இருந்தது. தொடர்ந்து இப்படிப்பட்ட கதைகளைக் கொடுங்கள்.

க. ஜோதி, வன்னிய தேனாம்பேட்டை, சென்னை-18.

அட்டைப் படம் ''பளிச்''சென்று இருந்தது. பேய் வீரன் படம் அபாரம்.

வி. தினகரன், டி. நாகேந்திரகுமார், ராமநாதபுரம்.

''மந்திரியை...'' சித்திரக்கதை ''சாக்லெட்'' சாப்பிட்ட மாதிரி இருந்தது.

து. கனகராஜ், காந்திபுரம், கோவை-12.

ஆரம்பத்தில் இருந்த விறுவிறுப்பு கடைசிவரை குறையவே இல்லை.

ஆர். பாஸ்கரன், இலத்தேரி.

பஸ்சில் பயணம் செய்துகொண்டே ஒரே மூச்சில் படித்து முடித்தேன்.

எஸ். பிரேமா ஜார்ஜ், மீடாலக்காடு.

''வார்த்தைப் பின்னல்'' பகுதி மூளைக்கு சரியான வேலை!

அ. ரவிந்திரன், அரூர்.

மாதம் இருமுறை இதழ் என்றால் நிறைய நாள் காத்திருக்க வேண்டி உள்ளதே! அதை, வாரம் ஒருமுறையாக மாற்றக்கூடாதா?

டி. எஸ். ஸ்ரீதரன், பெங்களூர்-47.

ராணி
காமிக்ஸ்

# அடுத்த இதழில்...!

# நாலாவது பலி!



தன்னைத் தொட்டவரை
எல்லாம் பலி வாங்கிய
கள்ள நோட்டின் திகில் கதை!

**படிக்கத் தவறாதீர்கள்!**

**15.9.84-ல் வெளிவருகிறது!**

Regd. No. TN/MS(N)/461

விண்ட்ஸர் பிஸ்கட்ஸ்–எல்லோராலும் விரும்பப்படுவன





விண்ட்ஸர்®

விண்ட்ஸர் ஃபுட்ஸ் லிமிடெட், வதோதரா-390014

*Marketing Agents :* SESHADRI ASSOCIATES, P. O. Box No. 4976, MADRAS-600 017.

PRINTED AT RANI PRINTERS, MADRAS-7.

Regd. No. TN/MS(N)/461

விண்ட்ஸர் பிஸ்கட்ஸ்—எல்லோராலும் விரும்பப்படுவன





விண்ட்ஸர்® விண்ட்ஸர் ஃபுட்ஸ் லிமிடெட், வதோதரா-390014

Marketing Agents : SESHADRI ASSOCIATES, P. O. Box No. 4976, MADRAS-600 017.

PRINTED AT RANI PRINTERS, MADRAS-7.

# 007 ஜேம்ஸ் பாண்ட்

துப்பறியும்



ராணி காமிக்ஸ்

# காதலியை விற்ற உளவாளி!

ரூ.1-50